<u>உடல்தானம் வழங்க விருப்பக் கடிதம்</u>

அனுப்பதல்

பெறுதல்

முதல்வர் அவர்கள்,
அரசு தருமபுரி மருத்துவக் கல்லூரி
தருமபுரி.

ஐயா/அம்மையீர்,

பொருள்: இறந்தபின் உடல்தானம் செய்வதற்கு விருப்பம் தெரிவித்தல் - தொடர்பாக.

__________________ பகுதியில் வசித்து வருகிற ________________ வயதுடைய நான் என்னுடைய இறப்பிற்குப் பின்னர், என்னுடைய உடலை அரசு தருமபுரி மருத்துவக் கல்லூரி மாணவர்களின் கல்வி மற்றும் ஆராய்ச்சிக்காக நானே முன்வந்து தானமளிக்க விரும்புகிறேன்.

இந்த உடல் தானமானது என்னுடைய சொந்த விருப்பத்தின் பேரினால் மட்டுமேயன்றி இதில் யாதொரு கட்டாயமும் இல்லை என்று இதன் மூலம் உறுதியளிக்கிறேன். நான் தெளிந்த மனதுடனும் செயல்பாட்டுடனும் இருக்கிறேன் என்றும் நான் உறுதியளிக்கிறேன்.

எனக்கு ஹெப்படைட்டிஸ்/ எச்.ஐ.வி அல்லது யாதொரு தொற்று நோயும் இல்லை என்று நான் உறுதியளிக்கிறேன்.

நான் எனது கண்களை தானமளித்துள்ளேன்/ தானமளிக்கவில்லை.

அனைத்து பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களையும் அதற்குண்டான ஆவணங்களையும் தங்களுக்கு சமர்பித்துக் கொள்கிறேன்.

நன்றியுடன்

தங்கள் உண்மையுள்ள

பெயர்:
முகவரி:

அலைபேசி எண்:

சாட்சிகள்:1.

2.

அங்க அடையாளங்கள்:

**(படிவம் - 1)**
**உடல் தானத்திற்கு ஏற்பாடு**

1) 100 ரூபாய் பத்திரத்தாளில் உடல்தானம் செய்பவர் குறிப்பிட வேண்டியவை

________________________என்கிற________________________________வயதுடைய என்பவரது மகன்/மகள்/மனைவி ஆகிய நான், ____________________________________________ _______________________________________________________________________________ _______________________________ என்ற முகவரியில் வசித்துவருகிறேன். நான் எனது முழு சுய நினைவுடன் யாருடைய வற்புறுத்தலோ, தூண்டுதலோ இன்றி சுய விருப்பத்துடன், இந்த ஏற்பாட்டினை ஏற்கிறேன். இந்த ஏற்பாடு எனது மரணத்திற்குப்பின் உடனே செயல்படுத்திட வேண்டும்.

எனது மரணத்திற்குப்பின் எனது உடல் அரசு தருமபுரி மருத்துவக் கல்லூரி உடல்கூறியல்துறைக்கு தானமாகத் தரப்படவேண்டும். அங்கு படிக்கும் மாணவர்களுக்கும், பணிபுரியும் மருத்துவர்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் பயன்படும் வண்ணம் இந்த ஏற்பாட்டை மகிழ்ச்சியுடன் செய்கிறேன்.

உடல்தானம் செய்பவரின்
கையொப்பம்

| சாட்சி: | பெயர் | முகவரி மற்றும் தொடர்பு எண் | கையொப்பம் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |

**(படிவம் - 2)**

## 2. வாரிசுதாரர்கள் எழுத வேண்டிய ஒப்புதல் கடித விவரம்

### வாரிசுதாரர்களின் ஒப்புதல்

________________________ ஆகிய நான் இறப்புக்கு பிறகு எனது விருப்பத்தின்பேரில், அரசு தருமபுரி மருத்துவக் கல்லூரிக்கு எனது உடலை தானம் அளிப்பதற்கு எனது சட்டபூர்வமான வாரிசுகள், எனது உடலின் மீது எந்தவித உரிமையும் கோரமாட்டார்கள் என உறுதி அளிக்கிறேன்.

உடல்தானம் செய்பவரின்
கையொப்பம்

இந்த உடல்தானத்திற்கு வாரிசுதாரர்களாகிய நாங்கள் முழு மனதுடன் சம்மதிக்கிறோம்.

### வாரிசுதாரர்கள் கையொப்பம்

| | பெயர் | பாலினம் | வயது | கையொப்பம் |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| 4. | | | | |

(படிவம் - 3)

**3. உடலை ஒப்படைப்பவர் எழுத வேண்டிய நியமனம் மற்றும் ஒப்புதல் கடித விபரம்**

**உடலை ஒப்படைப்பவரின் நியமனம்**

________________________________ என்ற ________ வயதுடைய ______________________

______________________________________________________________________________

_________________________________________________ விலாசத்தில் வசிக்கும் நான்

_____________________ என்ற __________ வயதுடைய

___________________________________

______________________________________________________________________________

_____________________விலாசத்தில் வசிக்கும் ______________ ( உறவுமுறை) அவர்கள் இந்த உடல்தான ஏற்பாட்டினை செய்ய இதன்மூலம் நியமனம் செய்கிறேன்.

உடல்தானம் செய்பவரின்
கையொப்பம்

இதற்கு நான் சம்மதிக்கிறேன்.

உடலை ஒப்படைப்பவரின் கையொப்பம்

I) **உடல் தானம் அளிக்க முன்வருபவர், அதனை பதிவு செய்வதற்கு அளிக்கப்பட வேண்டிய படிவங்களும் ஆவணங்களும்**

1. (அ) உடல்தானம் வழங்குபவரின் சொந்த விருப்பத்தின் பேரில் யாதொரு கட்டாயமுமின்றி மரணத்திற்கு பின்னர் அவருடைய உடலை தானமாக அளிக்கிறார் என்றும்,

   (ஆ) உடல் தானம் அளிப்பதை பதிவு செய்யும் சமயத்திலும் அதன் பின்னரும் உடல்தானம் அளிப்பதில் சட்டப்படிக்கான வாரிசுதாரர்கள் மறுப்புகள் தெரிவிக்கமாட்டார்கள் என்றும்,

   (இ) உடல்தானம் வழங்குபவரின் சட்டப்படியான வாரிசுகள் அல்லது நெருங்கிய உறவினர்கள் மறுப்புகள் எவற்றையும் தெரிவிக்கமாட்டார்கள் மேலும் மரணத்திற்கு பின்னர் உடலுக்கு உரிமை கோர மாட்டார்கள் என்றும்,

   உடல் தானம் அளிக்க முன்வருபவரால் எழுதப்பட்ட விருப்பக் கடிதம் ஒன்று.
2. மேற்சொன்ன கடிதமானது இரண்டு சாட்சிகளால் மேலொப்பம் இடப்பட்டிருக்க வேண்டும்.
3. உடல்தானம் வழங்குபவரின் உடலை தானமாக அளிப்பதற்கு சட்டப்படியான வாரிசுகளுக்கு எந்தவொரு மறுப்பும் இல்லை என்பதை தெளிவாக குறிப்பிடுகின்ற வகையில் உடல்தானம் வழங்குபவரின் சட்டப்படியான வாரிசுகளிடமிருந்து பெறப்பட்ட கடிதம் ஒன்று.
4. மேற்சொன்ன உடல்தானம் வழங்குபவரின் சட்டப்படியான வாரிசுகள் அனைவரையும் குறிப்பிடும் வகையில் சம்மந்தப்பட்ட வருவாய் அதிகாரியிடமிருந்து (வட்டாட்சியரின் பதவித்தரத்திற்கு குறையாத) பெறப்பட்ட சட்டப்படியான வாரிசு சான்றிதழின் நகல் அல்லது 100 ரூபாய் பத்திரத்தாளில் Notary Public வழக்கறிஞரிடம் பெறப்பட்ட உறுதிமொழிப் பத்திரம் ஒன்று.
5. மேற்சொன்ன உடல்தானம் வழங்குபவரின் இரண்டு அடையாள குறியீடுகளை தெளிவாக குறிப்பிடுகின்ற அடையாள சான்றிதழ் ஒன்று.
6. உடல்தானம் வழங்குபவரின் மூன்று பாஸ்போர்ட் அளவு புகைப்படங்கள்
7. உடல்தானம் வழங்குபவர் மற்றும் வாரிசுதாரர்களின் ஆதார் அட்டை நகல்.

II) **உடல் தானம் வழங்குபவர் மற்றும் நெருங்கிய உறவினர்களுக்கான வழிகாட்டிக் குறிப்புகள் மற்றும் அறிவுரைகள்**

1. மேற்சொன்ன உடல்தானம் வழங்குபவர், மரணமடைந்துவிட்ட பின்னர் அவருடைய உடலை, காலம் கடத்தாமல் (8 முதல் 24 மணி நேரத்திற்குள்) அவர் உடல் தானம் வழங்குவதற்காக பதிவு செய்துள்ள அரசு மருத்துவக் கல்லூரிக்கு அல்லது தமிழ்நாடு மாநிலத்தில் அருகிலுள்ள அரசு மருத்துவக் கல்லூரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
2. உடலை, பயிற்றுவிக்கும் மருத்துவ நிறுவனத்திற்கு கொண்டு செல்வதற்கு உடல் தானம் வழங்குபவர், மரணமடைந்துவிட்ட தகவலை, அருகிலுள்ள பயிற்றுவிக்கும் மருத்துவ நிறுவனத்தின் முதல்வர் / உள்ளிருப்பு மருத்துவ அலுவலருக்கு தெரிவிக்குமாறு சட்டப்படியான வாரிசுகள் அல்லது நெருங்கிய உறவினர்களிடம் கேட்டுக் கொள்ளப்படவேண்டும்.
3. இறப்பு ஏற்பட்டதற்கான காரணம் மற்றும் இறப்பு ஏற்பட்ட நேரத்தை தெளிவாக குறிப்பிடுகின்ற வகையில் தகுதிவாய்ந்த அதிகாரியால் அளிக்கப்பட்ட இறப்புச் சான்றிதழ், மேற்சொன்ன உடலுடன் சேர்த்து அனுப்பிவைக்கப்படவேண்டும்.
4. உடற்கூறியல் துறையால் அனைத்து வேலை நாட்களிலும் காலை 8.00 மணி முதல் மாலை 2.00 மணி வரையில் உடல் பெற்றுக் கொள்ளப்படும். பணி நேரம் அல்லா பிற நேரங்களிலும் விடுமுறை நாட்களிலும் உள்ளிருப்பு மருத்துவ அலுவலரிடம் தேவையான வகையில் கேட்டுக் கொள்வதன் பேரில் மருத்துவமனையின் பிணவறையில் உடல் வைக்கப்படும். இது குறித்து உடற்கூறியல் துறையிடம் விரைவில் தெரிவிக்கப்படும்.
   **தொடர்பு எண்கள்: 6369566116,**
   04342 -230622
5. மரணம் இயற்கையான முறையில் அல்லது இயற்கையில் ஏற்படுகின்ற நோயால் ஏற்பட்டிருக்கவேண்டும்.
6. மருத்துவம் சார் சட்ட பிரச்சினைகள், தற்கொலை, நஞ்சு அருந்தியது மற்றும் விபத்தால் ஏற்பட்ட மரணம் ஆகிய நேர்வுகளில், உடல் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.